# முத்தமிழ் மன்ற விழா



திருச்செங்கோடு விவேகானந்தா கலை அறிவியல் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் மன்ற விழாவில் சிறப்பு விருந்தினராக புதுகை ச.பாரதி அவர்கள் கலந்துகொண்டார்.

இவ்விழாவில் முத்தமிழ் மன்றப் பொறுப்பாளர்களை தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ம.கவிதா அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மன்றப் பொறுப்பாளர்கள் பதவியேற்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். மேலும் தமிழ் உயராய்வுத்துறையின் சார்பாக கீழ்காணும் ஆறு மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் என்றும் தமிழோடு”**

# தொல்காப்பியர் ஆய்வு மன்றம்




**நோக்கம்**

தமிழ்த்துறை மாணவிகளுக்கு இலக்கண வரையறையும் புலமையையும் சிறப்புகளையும் அறிந்துகொள்ள ஊக்குவித்தல்.

நமது கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில் 2018-19 ஆம் கல்வியாண்டு முதல் தொல்காப்பியர் ஆய்வு மன்றம் செயல்பட்டு வருகிறது. இந்த மன்றமானது தமிழ்த்துறையில் உள்ள மாணவிகள் மட்டுமல்லாமல் 2019 – 2020 கல்வி ஆண்டு முதல் பிறதுறைகளில் பயிலும் மாணவிகளுக்கும் தமிழர்களின் இலக்கண அறிவைக் கொண்டு செல்லும் வகையில் செயல்படுகிறது. ஐந்திணை மக்களின் ஒழுக்க நெறிகள், அவர்களின் வாழ்வியல் முறை ஆகியவை குறித்து கருத்துப்பரிமாற்றம் நடைபெற்றது. தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோரின் இலக்கண முறைகள் பற்றி அறிந்து கொள்ளும் விதமாக இந்நிகழ்வு அமைந்திருந்தது.

# விவேகானந்தர் பண்பாட்டு ஆய்வு மன்றம்




**நிகழ்வின் நோக்கம்:**

தமிழ்த்துறை மாணவிகளுக்கு **விவேகானந்தரின் பக்திப் புலமையையும் சிறப்புகளையும்** அறிந்துகொள்ள ஊக்குவித்தல்.

நமது கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில் 2018-19 ஆம் கல்வியாண்டிலிருந்து விவேகானந்தர் பண்பாட்டு ஆய்வு மன்றம் செயல்பட்டு வருகிறது. இந்த மன்றமானது, தமிழ்த்துறையில் உள்ள ஒவ்வொரு மாணவியிடமும் தமிழர்களின் பக்தி மற்றும் சமய அறிவைக் கொண்டு செலுத்துவதாகும்.

கட்டுரை வாசிப்பு, ஓவியம் வரைதல் தமிழ்த்துறையில் 24.07.2018 அன்று கட்டுரை வாசிப்பு, ஓவியம் வரைதல் என்னும் தலைப்பில் ஆய்வு மன்ற நிகழ்வு நடைபெற்று வருகிறது தமிழரின் பக்தி மற்றும் ,இறைவழிபாட்டு முறை அனைத்துத் தரப்பு மக்களாலும் பின்பற்றத் தக்கதாக மிக சிறந்த முறையாக விளங்கி வருகிறது.

# சித்தர் இலக்கிய ஆய்வு மன்றம்




**நிகழ்வின் நோக்கம்:**

தமிழ்த்துறை மாணவிகளுக்கு சித்தர்களின் மருத்துவப் புலமையையும் சிறப்புகளையும் அறிந்துகொள்ள ஊக்குவித்தல்.

கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில் 2018-19 ஆம் கல்வியாண்டிலிருந்து சித்தர் இலக்கிய ஆய்வு மன்றம் செயல்பட்டு வருகிறது. இந்த மன்றமானது, தமிழ்த்துறையில் உள்ள ஒவ்வொரு மாணவியிடமும் தமிழர்களின் மூலிகை அறிவைக் கொண்டு செலுத்துவதாகும்.

தமிழரின் மருத்துவ முறையான சித்த மருத்துவ முறை அனைத்துத் தரப்பு மக்களாலும் பின்பற்றத்தக்கதாக மிக எளிய மருத்துவ முறையாக விளங்கி வருகிறது. பக்க விளைவுகள் அற்றதாகவும், பாதுகாப்பானதாகவும் உள்ளது. சித்தர்கள் கூறிய நோய் அணுகாமுறையே சித்த மருத்துவத்தின் தனித்தன்மையாகும் என்ற உண்மையை இந்நிகழ்வில் மாணவியர் அறிந்துகொண்டனர்.

# கணித்தமிழ் ஆய்வு மன்றம்

**நிகழ்வின் நோக்கம்:**

தமிழ்த்துறை மாணவிகளுக்கு கணினியின் சிறப்புகளையும் அதனது பயன்பாடுகளையும் அறிந்துகொள்ள ஊக்குவித்தல்.

நமது கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில் 2018-19 ஆம் கல்வியாண்டு முதல் கணித்தமிழ் ஆய்வு மன்றம் செயல்பட்டு வருகிறது. இந்த மன்றமானது தமிழ்த்துறையில் உள்ள மாணவிகள் மட்டுமல்லாமல் 2019 – 2020 கல்வி ஆண்டு முதல் பிற துறைகளில் பயிலும் மாணவிகளுக்கும் கணித் தமிழ் அறிவைக் கொண்டு செல்லும் வகையில் செயல்படுகிறது. தமிழக அரசு கணித்தமிழுக்காக செயல்படுத்தும் திட்டங்கள் பற்றியும், கணித் தமிழால் நமக்கு உண்டாகும் வாய்ப்புகள் குறித்தும் மாணவியர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

நமது ஒவ்வொருவர் வாழ்விலும் பெற்றுள்ள இடம் குறித்தும், அலைபேசியில் தமிழை எவ்வாறு உள்ளீடு செய்வது என்பது குறித்தும், அதற்கான உள்ளீடு விசைப்பலகைகள் குறித்தும் எடுத்துரைப்பதாக இவ்வகுப்பு அமைந்தது.

# திருக்குறள் ஆய்வு மன்றம்




நமது விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் (தன்னாட்சி) தமிழ்த்துறையில் பயிலும் மாணவிகளுக்கு திருக்குறள் தொடர்பான மேடை வாய்ப்பை ஏற்படுத்திடவும் அவர்களுக்கு நடப்பியல் சமூகம் சார்ந்த நீதி இலக்கிய நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகிறது. இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை. மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம். மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள் மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம் அல்லது தர்மம், பொருள், இன்பம் அல்லது காமம் ஆகியவற்றைப்பற்றி விளக்கும் தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள்.

திருக்குறள் தமிழ்ச் செய்யுள்களில் முதல் பாவாகிய வெண்பாவில் முதல் வகையாகிய குறட்பாக்களால் ஆனது. திருக்குறள் கூறும் செய்திகளை அறிந்து கொள்ள இந்த மன்ற நிகழ்வுகள் உறுதுணையாய் அமைகிறது.

## வியாழன் வட்ட நிகழ்வு




விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் (தன்னாட்சி) தமிழ்த்துறையில் பயிலும் மாணவிகளுக்கு கலை இலக்கிய நிகழ்வுகள் தொடர்பான மேடை வாய்ப்பை ஏற்படுத்திடவும் அவர்களுக்கு நடப்பியல் சமூகம் சார்ந்த கலை இலக்கிய நிகழ்வு அனுப்பவத்தை பெறும் வகையிலும் வியாழன்தோறும் கலை இலக்கிய நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகிறது.

கவிதை வாசிப்பு, பேச்சுப்போட்டி போன்றவற்றில் மாணவியர் தமது சொல்லாட்சி திறனைச் சிறப்பாகப் புலப்படுத்தினார். ஓவ்வொரு வாரமும் ஒரு குறிப்பிட்ட நிகழ்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு நடைபெறுகின்றன.